


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (27.12.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 912/2016 நாள்: 27.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,
சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழா நிகழ்ச்சி
இன்று (27.12.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (27.12.2016) நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமையேற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

தமிழக அரசு சிறுபான்மையினர் நலன் கருதி, சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக சிறுபான்மையினர் மக்கள் உரிமை கொண்டாட, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 18-ம் தேதி சிறுபான்மையினர்கள் உரிமைகள் தினவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.
மேலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள பள்ளி வாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆசிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள், ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு விபத்து ஈட்டுறுதியின் கீழ் நிவாரணம், கல்வி உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கண் கண்ணாடி செலவு தொகை மற்றும் முதியோர் உதவித்தொகைகளையும், இந்த வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளும், முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, வயது முதிர்ந்த ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட முஸ்லீம் மகளிர் நலனுக்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம், மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், உதவிகள் மற்றும் தேவைக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ஆண்டிற்கு ரூ.20 இலட்சம் இணை மானியமும், இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு நிதியுதவிகளும், அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிருத்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர் மற்றும் பார்சி போன்ற மதவாரி சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு பள்ளிப்படிப்பு/பள்ளி மேற்படிப்பு (Online) கல்வி உதவித்தொகைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

மேலும் தனி நபர் கடன், சிறு வணிகக்கடன், கல்விக்கடன் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம், அரசு சிறுபான்மையினர் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள தமிழக அரசு நபர் ஒருவருக்கு ரூ.20000/- ஒரு குடும்பத்தில் 4 நபர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

எனவே சிறுபான்மையினர் மக்கள் நன்கு படித்து, கல்வி அறிவை வளர்த்து கொள்வதோடு, தமிழக அரசு வழங்கும் அனைத்து நலத்திட்டங்களையும் பெறவேண்டும். மேலும் மாவட்ட சிறுபான்மையினர் மற்றும் நலத்துறை சார்பாக வழங்கப்படும் நலத்திட்டங்கள், கல்வி உபகாரணங்கள் குறித்து, அவர்களிடையே விழிப்புணர்வு மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர், டாப்செட்கோ மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், 7 சிறுபான்மையினர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.50 ஆயிரத்திற்கான காசோலைகளையும், 9 சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.77,500/-க்கான காசோலைகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, ஜெருசேலம் புனித பயண குழு உறுப்பினர் மற்றும் மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், வழக்கறிஞர் மற்றும் திருவருட்பேரவை நிறுவனர் மற்றும் இணைச் செயலாளர் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் திரு. எம்.அகமதுகான், புனித பீட்டர் பால் சர்ச் சரல் அருட்தந்தை உபால்டு, தலைவர், குமரி மாவட்ட உலமா சபை மௌலவி ஆர்.என்.கே. அபுஸாலிக் பாசில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. பெ.வே. சரவணன், எஸ். முஹைதீன் ஷாஹுல் ஹமீது உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.